RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை மலர்-4 இதழ்- 302 நவம்பர்.2 2025 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5







## ஒவ்வொரு வாக்காளரின் வீட்டுக்கும் 3 முறை சென்று விவரங்களை சரிபார்க்க வேண்டும்: எஸ்ஐஆர் அலுவலர்களுக்கு தேர்தல் அதிகாரி அறிவுறுத்தல்



சென்னை, நவ.02-

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக, வாக் காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டம், ரிப்பன் மாளிகை வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் நேற்று நடை பெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகு திகளின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் முக் கிய செயல்முறைகள் தொடர் புடைய பணிகளை வாக்குச்சாவடி நிலை அலுவலர் களைக் கொண்டு உடனடியாக தொடங்க வேண்டும்.

தற்போதுள்ள வாக்காளர் களுக்கு, தீவிர திருத்த கணக் கெடுப்பு படிவங்களை வழங்கி படிவத்தை பூர்த்தி செய்து, வாக்காளர் பதிவு அலுவலர் களுக்கு வழங்க வேண்டும். கணக்கெடுப்புப் பணியின் போது, புதிய வாக்காளர் பட் டியலில் பெயர் சேர்க்க விரும் புபவர்களுக்கு படிவம் 6 மற் றும் அதற்கான உறுதிமொழிப் படிவத்தை வழங்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்காளர் களின் வீட்டுக்கு, குறைந்தது 3 முறை சென்று சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், இறந்தவர்கள், நிரந்தரமாக இடம் பெயர்ந் தவர்கள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்தவர்கள், குறிப்பாக நகர்ப்புற வாக்காளர்கள் அல்லது தற்காலிக இடம் பெயர்ந் தவர்களை கணக்கெடுப்பு பணியின்போது கண்டறிந்து உரிய படிவம் வழங்க வேண்டும். இவ்வாறு பயிற்சி கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா தொடக்கம்

தஞ்சாவூர், நவ.02-

தஞ்சாவூரில் மாமன் னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா நேற்று தொடங்கியது. இதையொட்டி நடை பெற்ற பரத நாட்டியம் மற் றும் கலை நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் பங்கேற் றனர். பெரிய கோயிலை கட்டிய மாமன்னன் ராஜ ராஜ சோழனின் 1040வது சதய விழா தஞ்சாவூரில் நேற்று தொடங்கியது.

இதையொட்டி, நேற்று காலை அரண்மனை வளாகத்தில் இருந்து புறப் பட்ட நாட்டுப்புறக் கலைஞர் களின் ஊர்வலத்தை எம் .பி. முரசொலி, எம்எல்ஏ துரை.சந்திரசேகரன், மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான நாட்டுப் புறக் கலைஞர்கள் பங்கேற் று, கலை நிகழ்ச்சிகளை நடத்தியபடி ஊர்வலமாக பெரிய கோயில் வரை வந் தனர்.

தொடர்ந்து, பெரிய கோயில் வளாகத்தில் 400 கலைஞர்கள் பங்கேற்ற பரத நாட்டிய புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், மேடை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, ஆட்சியர் பா.பிரியங்கா பங் கஜம் தலைமை வகித்தார். சதய விழாக் குழுத் தலை வர் து.செல்வம் வரவேற் றார். முன்னாள் எம்எல்ஏ எம்.ராமச்சந்திரன் முன் னிலை வகித்தார். திரு வாவடுதுறை ஆதீனம் 24 வது குருமகா சந்நிதானம் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்கினார்.

விழாவில், மாவட்ட எஸ்.பி.ராஜாராம், அரண் மனை தேவஸ்தான பரம் பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன் ஸ்லே, அறநிலையத் துறை இணை ஆணை யர் ஜோதிலட்சுமி, முன் னாள் நகர்மன்றத் தலை வர் சி.இறைவன், மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் ராஜா ராம் உள்ளிட்டோர் கலந் துகொண்டனர்.

பின்னர், கருத்தரங்கம், கவியரங்கம், 1,040 பேர் பங்கேற்ற பரதநாட்டியம், வில்லுப்பாட்டு, வரலாற்று நாடகம் ஆகியவை நடை பெற்றன. 2வது நாளான இன்று (நவ. 1) காலை மங்கல இசையுடன் நிகழ்ச்சி தொடங்குகிறது. தொடர்ந்து, கோயில் பணி யாளர்களுக்கு புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி, ராஜ ராஜ சோழன் சிலைக்கு அரசு மற்றும் பல்வேறு கட்சிகள், அமைப்புகள் சார்பில் மாலை அணி வித்து மரியாதை செலுத் தும் நிகழ்ச்சி, ராஜவீதி களில் திருமுறை பண் ணுடன் 100க்கும் மேற் பட்ட ஓதுவா மூர்த்திகளின் வீதியுலா நடைபெற உள் ளன. தொடர்ந்து, பெரு வுடையார், பெரியநாயகி அம்மனுக்கு பேரபிஷேகம், பெருந்தீப வழிபாடு நடை பெறும். மாலையில் இன் னிசை நிகழ்ச்சி, தேவார பண்ணிசை, சுவாமி வீதி யுலா, விருது வழங்கும் விழா உள்ளிட்ட நிகழ்ச் சிகள் நடைபெற உள்ளன.

## ஆர்டிஐயில் மனு பெற டிஎன்பிஎஸ்சி புதிய வசதி

சென்னை, நவ.02-

தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் மனுக்களை இணையவழியில் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட் டிருப்பதாக டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக டிஎன் பிஎஸ்சி செயலாளர் எஸ்.கோபால சுந்தர ராஜ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தேர்வர் களுக்கான சேவைகளை இணைவழியில் வழங்கும் விதமாக தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுக்களை இணையவழி யில் பெறும் வசதி தற் போது ஏற்படுத்தப்பட்டுள் ளது.

தேர்வர்கள் இச்சட்டத் தின்கீழ் மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக் களை https://rtionline. tn.gov.in/ என்ற இணை யதளத்தை பயன்படுத்தி இணையவழியில் சமர்ப்பிக் கலாம். எனவே, தேர்வர்கள் தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் மனுக்கள் மற்றும் மேல் முறையீடு களை தேர்வாணை யத் துக்கு தபால் மூலம் அனுப் புவதை தவிர்க்குமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கூறியுள்ளார்.

# ‘கடந்த 6 மாதங்களாகவே கட்சிக்கு எதிராகத் தான் இருந்தார்’

## செங்கோட்டையன் நீக்கம்; இபிஎஸ் விளக்கம்!



சென்னை: நவ.2-

“கடந்த 6 மாதங்களாகவே செங்கோட்டையன் கட்சிக்கு எதிராகத் தான் இருந்தார் என்றும் கட்சிவிரோத செயலில் ஈடுபட்டதால் செங்கோட்டையன் நீக்கப்பட்டுள்ளார்.” என்றும் அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்ததற்காக கட்சி சார்பற்ற விழாவில் நான் பங்குபெற்றேன். ஆனால் செங்கோட்டையன் பங்கேற்காமல் சென்றுவிட்டார். அந்த நிகழ்ச்சியில், முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா புகைப்படங்கள் இல்லை. அதனால்தான் பங்கேற்கவில்லை என்று செங்கோட்டையன் கூறினார்.

ஆனால், தமிழக அரசின் இலவச சைக்கிள் கொடுக்கும் விழாவில் செங்கோட்டையன் பங்கேற்றார். அந்த விழாவில் கருணாநிதி, ஸ்டாலின் புகைப்படங்கள்தான் இருந்தன. சைக்கிள் கொடுக்கும் விழாவில் எங்கே ஜெயலலிதா படம்?. கடந்த ஆறு மாதங்களாகவே கட்சிக்கு எதிராக தான் இருந்தார் செங்கோட்டையன்.

அதிமுகவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று செங்கோட்டையன் கூறுகிறார். ஆனால், செங்கோட்டையன் சொல்பவர்கள் எல்லாம் பிரிந்து சென்றவர்கள் இல்லை. கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

பொதுக்குழு முடிவே இறுதியானது. பொதுக்குழு முடிவை மீறி செங்கோட்டையன் செயல்பட்டார். 10 ஆண்டுகளுக்கு முன்பே கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர் டிடிவி தினகரன். ஜெயலலிதா இருந்தவரை இருக்கும் இடம் தெரியாமல் இருந்தவர் டிடிவி தினகரன். ஜெயலலிதாவால் நீக்கப்பட்டவர் அதிமுகவை குறித்து பேச அருகதை கிடையாது.

செங்கோட்டையன் கோடநாடு விவகாரம் குறித்து பேசியதைப் பார்த்தேன். கோடநாடு விவகாரத்தில் அதிமுக காலத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவரை எல்லாம் கட்சியில் வைத்திருந்தால் என்ன ஆகும். அவருக்கு உள்ளுக்குள் எவ்வளவு வன்மம் இருந்திருக்கும். சட்டப்பேரவையில் திமுகவை எதிர்த்து ஒரு வார்த்தை கூட செங்கோட்டையன் பேசியதில்லை. கட்சிக்கு எதிராக செயல்பட்டால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

ஜெயலலிதா இருக்கும்போது செங்கோட்டையனின் அமைச்சர் பதவி, மாவட்டச் செயலர் பதவி பறிக்கப்பட்டது. நான் பொறுப்பேற்ற போதுதான், செங்கோட்டையனை மீண்டும் அமைச்சராக்கினேன். ஓபிஎஸ் கட்சிக்கு உண்மையாக இல்லை. சில நாட்களுக்கு முன்பு ஓபிஎஸ்ஸும், அவரது மகனும் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பூங்கொத்து கொடுத்தார்கள். ஜெயலலிதா இருந்திருந்தால் இப்படி செய்திருப்பார்களா? இப்படி கட்சிக்கு விரோதமாக செயல்படுபவர்களை எப்படி கட்சியில் இணைக்க முடியும்?

ஓபிஎஸ் எப்படிப்பட்டவர் என்பதை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்பவர்கள்தான் ஓபிஎஸ், செங்கோட்டையன் போன்றோர். திமுகவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர செங்கோட்டையன் தினகரன், ஓபிஎஸ் ஆகியோர் திட்டமிட்டு வருகின்றனர். அவர்கள் திமுகவின் ‘பி’ டீம், திமுகவிடம் சரணடைந்துவிட்டனர். கட்சி விரோத செயலில் ஈடுபட்டதால் தான் செங்கோட்டையன் நீக்கப்பட்டுள்ளார்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## என்னை கட்சியிலிருந்து நீக்கியதை எதிர்த்து வழக்கு தொடர்வேன்: செங்கோட்டையன்



கோபி, நவ.02-

“என்னை கட்சியிலிருந்து நீக்கியதால் நான் மிகுந்த வருத்தமடைந்துள்ளேன். கண்ணீர் சிந்தும் நிலையில் இருக்கிறேன். என்னை நீக்கியது தொடர்பாக வழக்கு தொடர்வேன். இபிஎஸ் தற்காலிக பொதுச் செயலாளர். அதிமுக ஒன்றிணைந்தால் தான் வெற்றி பெற இயலும்.” என்று செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். மேலும், துரோகத்துக்கு ஒரு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால் அதை எடப்பாடி பழனிசாமிக்கு தான் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதிமுகவிலிருந்து முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை நீக் கி, பழனிசாமி நேற்று உத் தரவிட்டார். இந்த உத்தரவு எதிர்பார்க்கப்பட்டது என்றாலும் கூட தமிழக அரசியலில் தேர்தல் காலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இது குறித்து ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டி பாளையத்தில் இன்று காலை செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், “அதிமுகவில் 1972ல் இருந்து பணியாற்றியவன் நான். எம்ஜிஆருடன் எனது பயணத்தைத் தொடங்கி 1975ல் கோவையில் முதல் பொதுக் குழுவை சிறப்பாக நடத்தி அவரது பாராட்டைப் பெற்றவன்.

அதன் பின்னர் ஜெயலலிதாவின் வழியில் இந்த இயக்கத்துக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டவன். ஜெயலலிதா கைகாட்டிய பாதையில் தடம் புரளாமல், சலனத்துக்கு இடம் தராமல் பணியாற்றிய விசுவாசி நான். அதை அவரே பல தருணங்களில் குறிப்பிட்டு என்னைப் பாராட்டியுள்ளார். அவர்கள் இருவரின் காலத்திலும், அதற்குப் பின்னரும் கூட இந்த இயக்கம் வலுவாக இருக்கவே பணியாற்றினேன்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் இந்த இயக்கம் உடைந்துவிடக் கூடாது என்பதற்காகவே எனக்குக் கிடைத்த வாய்ப்புகளை இரண்டு முறை நான் விட்டுக் கொடுத்தேன். எடப்பாடி பழனிசாமி முதல்வர் பதவியை எப்படிப் பெற்றார் என்பதை இந்த நாடறியும். அப்படிப்பட்ட நிலையில், அதிமுக பொதுச் செயலாளராக இபிஎஸ் பொறுப்பேற்ற பின்னர், அவர் எடுத்த பல்வேறு முடிவுகளின் காரணமாக கட்சி தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை தொடர்ந்து இழந்ததை நாம் பார்த்து வருகிறோம். எம்ஜிஆர் தேர்தல் தோல்வி அறியாதவர். ஜெயலலிதா ஒரு முறை தோல்வியடைந்தால் அடுத்த முறை வெற்றியை வசமாக்கிவிடுவார்.

அவரது மறைவுக்குப் பிறகு, 4 ஆண்டு காலம் ஆட்சி நடந்தது. ஆனால், அதன்பின்னர் அதிமுக வெற்றி வாய்ப்புகளைப் பெறவில்லை. இதனால் துயரத்துடன் இருந்த அதிமுகவினரின் கருத்துகளை நாங்கள் 6 பேர் இபிஎஸ்ஸிடம் எடுத்துரைத்தோம். அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என்பதே தொண்டர்களின் உணர்வு என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினேன்.

அதிமுகவை ஒன்றிணைக்கவே நான் தேவர் ஜெயந்தி அன்று டிடிவி தினகரன், ஓபிஎஸ்ஸை சந்தித்தேன். அதற்குக் கிடைத்த பரிசுதான் நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி கட்சிக்கு வருவதற்கு முன்னரே நான் அதிமுகவில் இருந்தவன். கட்சியில் சீனியர் என்ற முறையில் எனக்கொரு நோட்டீஸாவது அனுப்பி யிருக்க வேண்டும். நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது வருத்தமளிக்கிறது. கண்ணீர் சிந்தும் நிலையில் உள்ளேன். கட்சியிலிருந்து என்னை நீக்கியது தொடர்பாக வழக்கு தொடர்வேன். இபிஎஸ் தற்காலிக பொதுச் செயலாளர் தான்.

மேலும் கொடநாடு வழக்கில் அவர் ஏ1 என்பதை மறந்துவிட்டு, என்னை திமுகவின் ‘பி’ டீம் என்று விமர்சித்து வருகிறார். யார் ‘பி’ டீம் என்பதை நாடறியும். துரோகத்துக்கு ஒரு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால் அதை எடப்பாடி பழனிசாமிக்கு தான் கொடுக்க வேண்டும். மீண்டும் அதிமுகவை ஒன்றிணைத்தால் தான் வெற்றி பெற இயலும்.” எனத் தெரிவித்தார்.

## தெரு நாய்களை கட்டுப்படுத்தும் வழக்கில் தலைமைச் செயலர்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி, நவ.02-

தெரு நாய்கள் விவகாரத்தில் பதில் மனு தாக்கல் செய்யாத தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் நவம் பர் 3ம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தெரு நாய்கள் தொல்லை தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது. இந்த வழக்கு கடந்த 27ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, பதில் மனு தாக்கல் செய்யாத தமிழ்நாடு உள்ளிட்ட மாநில தலைமைச் செயலாளர்கள் நவம்பர் 3ம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத் தலைமையி லான அமர்வு முன், மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா நேற்று ஆஜராகி, “பதில் மனு தாக்கல் செய்யாத மாநிலங் களின் தலைமைச் செயலாளர் கள் நேரில் வருவதற்கு பதிலாக காணொலியில் ஆஜராக அனு மதிக்க வேண்டும்” என முறை யிட்டார்.

முறையீட்டை நிராகரித்த நீதிப திகள், “விலங்கு கருத்தடை விதி களை நாடாளுமன்றம் ஏற்படுத் தியும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இது தொடர்பாக பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட் டோம். அதற்கும் நடவடிக்கை இல் லாமல் தூங்கிக் கொண்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பு இல்லை. நேரில் வந்து விளக்கம் அளிக்கட்டும்” என்று திட்டவட்ட மாக தெரிவித்தனர்.



## ஒட்டன்சத்திரம் பகுதியில் பூத்துக் குலுங்கும் மருத்துவ குணமுள்ள செங்காந்தள் மலர்கள்

பழநி, நவ.02-

ஒட்டன்சத்திரம் பகுதியில் மருத்துவ குணமுள்ள செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம், தும்பிச்சிப் பாளையம், அம்பிளிக்கை, இடையகோட்டை, பொருளூர் உள்ளிட்ட பகுதிகளில் செங்காந்தள் மலர் எனும் கண்வலி கிழங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. செங்காந்தள் மலர் மாநில அரசின் மலராகவும் உள்ளது.

இதன் கிழங்கு பல்வேறு மருத்துவ குணம் கொண்டதால், மருத்துவப் பயன்பாட்டுக்காக இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது, பொருளூரு, கள்ளிமந்தையம் பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள கண்வலி கிழங்கு செடியில் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

இவற்றை அந்த வழியாகச் செல்லும் வாகன ஓட்டுநர்கள், பொதுமக்கள் பார்த்து ரசித்து, புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: தற்போது ஒரு கிலோ கண்வலி கிழங்கு விதை ரூ.2,500 முதல் ரூ.3,000 வரை விற்பனையாவதால், ஒட்டன்சத்திரம் பகுதியில் விவசாயிகள் ஆர்வமுடன் கண்வலி கிழங்கை பயிரிட்டுள்ளனர். அவற்றில் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. முன்கூட்டியே நடவு செய்த பகுதிகளில் தற்போது கண்வலி கிழங்கு அறுவடை தொடங்கியுள்ளது.

அறுவடை நேரத்தில் ஒரு கிலோ ரூ.3,000 முதல் ரூ.5,000 வரை விற்பனையாகும். கண்வலி கிழங்குக்கு நிலையான விலை இல்லாததால், நுகர்வைப் பொறுத்து விலையில் ஏற்ற இறக்கத்துடன் விற்பனை செய்யப்படுகிறது.

பாரம்பரியமாக தொடர்ந்து கண்வலி கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க மத்திய, மாநில அரசுகள் நெல், கொப்பரை தேங்காய் உள்ளிட்டவற்றை கொள்முதல் செய்வது போல், கண்வலி கிழங்கையும் நேரடியாக கொள்முதல் செய்து மருந்து தயாரிக்க வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், விவசாயிகளுக்கு நிரந்தரமான வருமானம் கிடைக்கும் என்றனர்.



## புனித தோமையார் மலை ஒன்றியம் பெரும்பாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

பெரும்பாக்கம், நவ.02-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (நவம்பர் : 01) ஊராட்சி மன்ற தலைவர்., சுகாசினி ரங்கராஜன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வாளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., நாராயணன் நிறைவேற்றப்பட்ட பணிகளின் பட்டியலின் விபரங்களை அனைவரின் முன்பு படித்துக் காட்டினார். தொடர்ந்து பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து பெரும்பாக்கம் முதல் நிலை ஊராட்சி அதிக மக்கள் தொகை கொண்ட ஊராட்சியை மேலும் மேலும் வளர்ச்சி அடைய பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு ஊராட்சி மன்ற தலைவர்., சுகாசினி ரங்கராஜன் கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேங்கடமங்கலம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

வேங்கடமங்கலம், நவ.02-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், வேங்கடமங்கலம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (நவம்பர் : 01) ஊராட்சி மன்ற தலைவர்., கல்யாணி ரவி தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., வளர்மதி அனைவரின் முன்பு நிறைவே ற்றப்பட்ட பட்டியலில் விபரங்களை படித்துக் காட்டினார். தொடர்ந்து பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கை களை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மழைக்காலங்களில் டெங்கு விழிப்புணர்வு பற்றி பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., வளர்மதி எடுத்துரைத்தார் . தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர்., கல்யாணி ரவி ஆங்காங்கே காணப் படும் குப்பைகளை அகற்றி சுத்தமான ஊராட்சியாக வைத்துக் கொள்ள அனைவரும் உறுதுணையாக இருந்து ஒற்றுமையாக செயல்படுவோம் என்று கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பிஹாரில் துன்பத்தை தாங்க முடியாத மக்கள் தமிழகம் வந்து இன்பமாக வாழ்கின்றனர்: மு.அப்பாவு



திருநெல்வேலி, நவ.02-

பிஹாரில் துன்பத்தை தாங்க முடியாத மக்கள் தமிழகத்துக்கு வந்து இன்பமாக வாழ்கின்றனர் என சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் பகுதியில் ரூ.65.99 கோடி மதிப்பில் 6 கிலோமீட்டர் தூரத்துக்கு 10 மீட்டர் அகலத்தில் அமைக்கப்பட்டுள்ள புறவழிச் சாலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக இன்று திறந்து வைத்தார். இந்தச் சாலையை பார்வையிட்ட தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: செங்கோட்டையன் அதிமுக உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நிலையில், அவரை சட்டப்பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கக் கோரி இதுவரை கடிதம் எதுவும் தரவில்லை. கடிதம் அளித்தால் அதைப் பொருந்து ஆய்வு செய்து, முடிவு எடுக்கப்படும்.

ஒடிசாவில் புரி ஜெகந்நாதர் ஆலய சாவியை அப்போதைய முதல்வருக்கு நெருக்கமாக இருந்த தமிகத்தைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி பாண்டியன் என்பவர் தமிழகத்துக்கு கொண்டு சென்றுவிட்டார் என்று பேசினர். இப்போது பிஹார் தேர்தலுக்காக மீண்டும் ஒரு கருத்தை பரப்புரையில் தெரிவித்துள்ளார். பிரமதர் பதவி வகிக்கும் மோடி ஓட்டுக்காக அந்த வார்த்தைகளை பயன்படுத்தியிருக்க கூடாது.

பிற மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் தமிழக பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணிக்கின்றனர். பிற மாநில மாணவ, மாணவிகளுக்கும் பாரபட்சமின்றி மாதம் ஆயிரம் ரூபாய் முதல்வர் வழங்குகிறார். பாஜக கூட்டணி ஆட்சி நடைபெறும் பிஹாரில் அவர்கள் தரும் துன்பத்தை தாங்க முடியாத மக்கள் தமிழகத்துக்கு வந்து இன்பமாக வாழ்கின்றனர். இந்த ஆட்சியால் யாரும் துன்பமாக இல்லை. எல்லோருக்கும் நன்மையை அளிக்கிறது இந்த ஆட்சி. மணிமுத்தாறு காரையாறு அணை இணைப்பு தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அந்த முயற்சி நடந்து வருகிறது.

நகராட்சி நிர்வாகத் துறையில் 2538 பணியிடங்கள் நேர்மையாக, வெளிப்படைத் தன்மையோடு அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தேர்வு நடத்தி, பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதில் எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை. அமலாக்கத் துறை தமிழக டிஜிபிக்கு இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க அறிக்கை அனுப்பியது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது. நீதிமன்ற அவமதிப்பு என்றே சொல்லலாம்.

2017ல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் உறுதிப்படுத்தப்படாத ஆவணங்கள் அடிப்படையில் எப்ஐஆர் பதிவு செய்வது அல்லது விசாரணையை அனுமதிப்பது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என்று கூறியது. 2012ல் சஹாரா நிறுவனங்களில் நிதி திரட்டுவதற்காக செபியிடம் அனுமதி வாங்கி அதில் முறைகேடு செய்ததால் சஹாரா நிறுவனம் மீது செபி நடவடிக்கை எடுத்தது. உடனடியாக சிபிஐ, வருமானவரித்துறை 2013, 2014ல் சஹாரா நிறுவனங்களில் சோதனை நடத்தி ஆவணங்களைக் கைப்பற்றியது.

அதில் ஒரு ஆவணம் சஹாரா டைரீஸ் நிறுவனத்தில் அப்போது குஜராத் முதல்வராக இருந்த இப்போதைய பிரதமர் நரேந்திர மோடி 25 கோடி ரூபாய் நான்கு தவணையாக கையூட்டு பெற்றார் என்பது வெளியானது. அப்போது மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கில் அரசு சாரா நிறுவனத்துக்காக ஆஜராகினார். உடனடியாக சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்க வேண்டும், விசாரணை ஆணையம் அமைத்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில், 2017 ல் தீர்ப்பளிக்கப்பட்டது. உயர் அரசியலமைப்பு செயல்பாட்டாளர்களுக்கு எதிராக இதுபோன்ற உறுதி செய்யப்படாத ஆவணங்கள் மூலம் எப்ஐஆர் பதிவு செய்வது, விசாரணைக்கு உத்தரவிடுவது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம். இப்போது உறுதிப்படுத்தப்படாத ஆவணத்தை கையில் எடுத்து கே.என்.நேரு மீது விசாரணை நடத்தக் கூறுவது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது.

பிரமதர் கையூட்டு பெற்றதாக வந்த உறுதிப்படுத்தப்படாத ஆவணம் தொடர்பாக அமலாக்கத் துறை நடவடிக்கை எடுக்க தைரியம் உள்ளதா?. தமிழக அரசுக்கு தேர்தல் நேரத்தில் நெருக்கடி கொடுக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன் மணலில் ஊழல், டாஸ்மாக்கில் ஊழல், பணி நியமனத்தில் முறைகேடு என்று கூறி அமலாக்கத் துறையை பயன்படுத்துகின்றனர். உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக செயல்பட்ட அமலாக்கத் துறை மீது நடவடிக்கை எடுக்கலாம். தமிழக ஆளுநர் பாதி மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். இன்னும் பாதி மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு அப்பாவு கூறினார்.

## நெல் மூட்டைகளை கொண்டு செல்லும் வாகன ஒப்பந்தத்தில் முறைகேடு குறித்து சிபிஐ விசாரணை தேவை

சென்னை, நவ.02-

'நெல் மூட்டைகளைக் கொண்டு செல்லும் வாகன ஒப்பந்தத்தில் நடந்துள்ள ஊழல் குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும்' என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை கிடங்குகள் மற்றும் அரவை நிலையங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் மூலம் கடந்த ஆண்டில் ரூ.160 கோடி அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

திமுக என்றாலே விஞ்ஞான ஊழல்தான் என்று சொல்லும் அளவுக்கு ஒவ்வொரு துறையிலும் ஊழல்கள் நடைபெற்று வருகின்றன. லாரிகளுக்கு ஒப்பந்தம் வழங்குவதன் மூலம் மக்கள் வரிப்பணம் கொள்ளையடிக்கப் படுவதை அனுமதிக்க முடியாது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் போக்குவரத்து ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதில் ஊழல் நடைபெற்றுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் இது குறித்து சிபிஐ விசாரணைக்கு ஆணையிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

டிடிவி தினகரன் கோரிக்கை: அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை நுகர்பொருள் வாணிபக் கழக குடோன்கள், அரவைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் லாரி போக்குவரத்து ஒப்பந்தத்தில் சுமார் ரூ.160 கோடி அளவுக்கு முறைகேடு நடந்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனவே, லாரி போக்குவரத்து ஒப்பந்தத்தின் மீது எழுந்திருக்கும் முறைகேடு புகாரை விசாரிப்பதோடு, விதிமுறைகள் மீறப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## "கோவை மாவட்டம் இனி திமுகவின் கோட்டை" செந்தில் பாலாஜி நம்பிக்கை

கோவை, நவ.02-

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் கோவையில் திமுக அதிக வாக்குகளை பெற முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார். கோவை மாநகர் மாவட்ட திமுக சார்பில் சிங்காநல்லூரிலும், கோவை வடக்கு மாவட்ட திமுக சார்பில் தொண்டாமுத்தூரிலும், கோவை தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஈச்சனாரியிலும், 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சரும், திமுக மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில்பாலாஜி தலைமை வகித்தார். சிங்காநல்லூர் கூட்டத்துக்கு மாவட்ட பொறுப்பாளர் துரை. செந்தமிழ்செல்வன், தொண்டாமுத்தூரில் நடந்த கூட்டத்துக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, ஈச்சனாரியில் நடந்த கூட்டத்துக்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதுதொடர்பாக, மண்டல பொறுப்பாளர் செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது: முதல்வரின் வழிகாட்டுதலின்படி இந்த நிகழ்வுகள் கோவையில் நடைபெற்று, கடந்த சட்டப்பேரவைத் தேர்தலை விட அதிகமான வாக்குகளை பெறுவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக முதல்வர் தொடர்ந்து எதிர்ப்புகளை பதிவு செய்து வருகிறார்.

பிஹார் தேர்தலில் என்ன நடந்தது என்று அனைவருக்கும் தெரியும். அதுபோன்ற ஒரு சூழல் தமிழ்நாட்டில் வந்து விடக்கூடாது. அவர்கள் எடுக்கக்கூடிய முயற்சிகளை திமுக அனுமதிக்காது. சிறப்பு தீவிர திருத்தம் விவகாரத்தை திமுக மிக கவனமாக கையாண்டு வருகிறது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கோவை மாவட்டம் திமுகவின் கோட்டையாக அமையும். இவ்வாறு அவர் கூறினார். இக்கூட்டங்களில் திமுக தீர்மானக் குழு செயலாளர் நா.கார்த்திக், மாணவரணி மாநில செயலாளர் ராஜீவ்காந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவில் தீவிர வறுமையை ஒழித்த முதல் மாநிலமாக மாறியது கேரளா: பினராயி விஜயன் அறிவிப்பு

திருவனந்தபுரம், நவ.02-

இந்தியாவில் தீவிர வறுமையை ஒழித்த முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது. இதுகுறித்த அறிவிப்பை மாநில சட்டப்பேரவையில் இன்று முதல்வர் பினராயி விஜயன் வெளியிட்டார்.

கேரள மாநிலம் உருவான தினத்தை முன்னிட்டு இன்று (நவம்பர் 1) கூட்டப்பட்ட சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் முதல்வர் பினராயி விஜயன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து பேசிய அவர், "கேரள மாநிலம் உருவான தினமான இந்த நாள் வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது, ஏனெனில் கேரளாவை தீவிர வறுமை இல்லாத முதல் இந்திய மாநிலமாக மாற்றுவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். இந்த சட்டப்பேரவை பல வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டங்கள் மற்றும் கொள்கை அறிவிப்புகளைக் கண்டுள்ளது. வளர்ச்சியடைந்த கேரளாவை உருவாக்குவதில் மற்றொரு மைல்கல்லைக் குறிக்கும் தருணத்தில் சட்டப்பேரவை இன்று கூடியுள்ளது.

2021 ஆம் ஆண்டு புதிய அமைச்சரவை பதவியேற்ற பிறகு நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளில் ஒன்று தீவிர வறுமை ஒழிப்பு. சட்டப்பேரவை தேர்தலின் போது மக்களுக்கு அளிக்கப்பட்ட மிக முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றுவதற்கான தொடக்கமாகவும் அது அமைந்தது" என்றார்.

கேரளா தீவிர வறுமையை ஒழித்தது எப்படி? இந்தியாவில் 100 சதவீத கல்வியறிவை அடைந்த முதல் மாநிலம், டிஜிட்டல் கல்வியறிவு பெற்ற முதல் மாநிலம் மற்றும் முழுமையாக மின்சாரம் பெற்ற மாநிலம் ஆகிய பெருமைகளை பெற்ற கேரளா, மக்களை தீவிர வறுமையிலிருந்து மீட்க பல முயற்சிகளை எடுத்துள்ளது.

ரூ.1,000 கோடிக்கும் அதிகமான முதலீட்டில், கேரள மாநில அரசு 20,648 குடும்பங்களுக்கு தினசரி உணவை உறுதி செய்தது, அவர்களில் 2,210 பேருக்கு சூடான உணவு வழங்கப்பட்டது. மேலும், 85,721 நபர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை மற்றும் ஆயிரக்கணக்கானோருக்கு வீட்டுவசதி ஆகியவற்றையும் அரசு உறுதி செய்தது.

தீவிர வறுமையை ஒழிக்கும் நோக்கில் 5,400க்கும் மேற்பட்ட புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்றும், 5,522 வீடுகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன என்றும், 2,713 நிலமற்ற குடும்பங்கள் வீடு கட்ட நிலம் பெற்றுள்ளன என்றும் பினராயி விஜயன் கூறினார். இது தவிர, 21,263 பேர் முதல் முறையாக ரேஷன் கார்டுகள், ஆதார் மற்றும் ஓய்வூதியம் போன்ற அத்தியாவசிய ஆவணங்களைப் பெற்றனர் என்றும், மேலும் 4,394 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள் கிடைத்துள்ளன.

மேலும், தீவிர வறுமையை ஒழிக்க ஒரே மாதிரியான கொள்கைக்கு பதிலாக, அரசாங்கம் 64,006 பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களை அடையாளம் கண்டு, ஒவ்வொருவரின் தனித்துவமான தேவைகளுக்கும் குறிப்பிட்ட நுண் திட்டங்களை உருவாக்கியது." என்று பினராயி விஜயன் கூறினார்.

கேரளா தீவிர வறுமையிலிருந்து மீட்கப்பட்டது குறித்த அறிவிப்புக்காக சிறப்பு சட்டப்பேரவை கூட்டம் தொடங்கியதும் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் வி.டி. சதீசன், "முதல்வரின் இந்த அறிவிப்பு முழுமையான மோசடி. இது அவை விதிகளை அவமதிக்கும் வகையில் உள்ளது. நாங்கள் இதனை ஏற்க முடியாது, எனவே கூட்டத்தொடரை முற்றிலுமாகப் புறக்கணிக்கிறோம்." என்று கூறினார். பின்னர் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தது.

# அனைத்துவித அழுத்தங்களில் இருந்தும் இந்தோபசிபிக் விடுபட வேண்டும்: ராஜ்நாத் சிங்

கோலாலம்பூர், நவ.02-

அனைத்து வித அழுத்தங்களில் இருந்தும் இந்தோ பசிபிக் விடுபட வேண்டும் என்பதே இந்தியாவின் கொள்கை என்று மலேசியாவில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சர்களுக்கான கூட்டத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.




மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியான் இந்தியா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், "ஆசியான் இந்தியா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் கடந்த 2010ல் ஹனேயில் தொடங்கப்பட்டபோது அது தனது தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தியது. கடந்த 15 ஆண்டுகளாக இந்த மன்றம், உரையாடல்களுக்கான தளமாக இருப்பதற்கு அப்பால், நடைமுறை பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒரு கட்டமைப்பாக மாறி உள்ளது.

உள்ளடக்கிய மற்றும் நிலையான பாதுகாப்பு என்ற தலைப்பிலான இந்தக் கூட்டம், மிகவும் சரியான நேரத்தில் மலேசியாவில் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும். பாதுகாப்பில் உள்ளடக்கம் என்பது அனைத்து நாடுகளும், அவற்றின் அளவு மற்றும் திறனைப் பொருட்படுத்தாமல் பிராந்திய ஒழுங்கை உருவாக்குவதிலும் பயனடைவதிலும் சம பங்காளிகளாக மாறுவதாகும். நிலைத்தன்மை என்பது அதிர்ச்சிகளைத் தாங்கும், புதிய சவால் களுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் நீண்ட கால ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதாகும்.

இந்தியாவின் இந்தோ பசிபிக் பாதுகாப்பு தொலைநோக்குப் பார்வை, பாதுகாப்பு ஒத்துழைப்பை பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப பகிர்வு, மனிதவள முன்னேற்றம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கிறது. பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான இந்த தொடர்புதான் இந்தியா ஆசியான் கூட்டாண்மையின் உண்மையான ஆன்மா.

இந்தியாவை பொறுத்தவரை, ஆசியான் இந்தியா பாதுகாப்பு கூட்டாண்மை என்பது அதன் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் பரந்த இந்தோ பசிபிக் பார்வையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். 2022ல் ஆசியான் இந்தியா கூட்டாண்மை விரிவான மூலோபாய கூட்டாண்மையாக உயர்த்தப்பட்டபோது, அது அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாக மட்டுமின்றி, பிராந்திய முன்னுரிமைக்கான ஆழமான சான்றாகவும் இருந்தது.

இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை எப்போதும் தெளிவாக உள்ளது. திறந்த, உள்ளடக்கிய, விதிகளை அடிப்படையாகக் கொண்ட இந்தோ பசிபிக் என்பதே அது. எதிர்கால பாதுகாப்பு ராணுவத்திறனை மட்டும் சார்ந்திருக்காது. பகிரப்பட்ட வளங்களை நிர்வகித்தல், டிஜிட்டல் உள்கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு கூட்டுப் பதில் அளித்தல் ஆகியவற்றையும் சார்ந்திருக்கும்." எனத் தெரிவித்தார்.

# ஆந்திராவில் கோயில் கூட்ட நெரிசலில் சிக்கி 9 பேர் உயிரிழப்பு -விபத்து நிகழ்ந்தது எப்படி?

ஸ்ரீகாகுளம், நவ.02-

ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மினி திருப்பதி என அழைக்கப்படும் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.



ஸ்ரீகாகுளம் மாவட்டத்தின் காசிபுக்கா நகரில் புதிதாக கட்டப்பட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயிலில் இன்று ஏகாதசி சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. திருப்பதி பெருமாள் கோயில் வடிவில் கட்டப்பட்டு திறப்பு விழா கண்டு 4 மாதங்களே ஆன இக்கோயில் மினி திருப்பதி என அழைக்கப்படுகிறது.

ஏகாதசியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் இன்று காலை முதலே இக்கோயிலுக்கு வரத் தொடங்கியுள்ளனர். அதிகபட்சம் 3 ஆயிரம் பக்தர்களை மட்டுமே கையாளும் திறன் கொண்ட இக்கோயிலில் இன்று சுமார் 25,000 பக்தர்கள் வந்ததாகக் கூறப்படுகிறது.

இக்கோயில் தனியாருக்குச் சொந்தமானது. இன்று இவ்வளவு பேர் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு கோயில் நிர்வாகத்துக்கு இல்லாததால், அவர்கள் காவல்துறை பாதுகாப்பு கோரவில்லை என கூறப்படுகிறது.

எதிர்பாராத விதமாக ஏராளமானோர் கூடிய நிலையில், கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். கூட்ட நெரிசலில் மூச்சு விட முடியாமல் பலர் மயங்கி விழுந்துள்ளனர். இதில், 8 பெண்கள், ஒரு குழந்தை என 9 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து வீடியோ வெளியிட்டுள்ள ஆந்திரப் பிரதேச அறநிலையத்துறை அமைச்சர் அனம் ராமநாராயண ரெட்டி, "காசிபுக்கா நகர் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயில் அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. அது தனியாருக்குச் சொந்தமானது. ஹரிமுகுந்த் பாண்டா என்ற நபர் தனது சொந்த நிதியில் 12 ஏக்கர் நிலத்தில் இக்கோயிலை கட்டியுள்ளார்.

இன்று ஏகாதசி என்பதாலும் சனிக்கிழமை என்பதாலும் ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயிலுக்கு வந்துள்ளனர். 2,000 பக்தர்கள் முதல் 3,000 பக்தர்கள் வரை மட்டுமே சமாளிக்கும் திறன் கொண்டது இக்கோயில். ஆனால், சுமார் 25,000 பேர் ஒரே நேரத்தில் கோயிலுக்கு வந்துள்ளனர். ஆனால், அதற்கேற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அரசு நிர்வாகத்துக்கும் தெரிவிக்கப்படவில்லை. விபத்துக்கு இதுதான் காரணம்.

சம்பவத்தை அடுத்து முதல்வரின் உத்தரவின்பேரில் அமைச்சர்கள் அங்கு விரைந்து வந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். காயமடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது" என தெரிவித்துள்ளார்.

விபத்து நிகழ்ந்த கோயில்

இந்த விபத்து குறித்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, "ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள காசிபுக்கா வெங்கடேஸ்வரா கோயிலில் கூட்ட நெரிசலில் சிக்கி பக்தர்கள் உயிரிழந்தது மிகவும் வருத்தமளிக்கிறது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளைக் கண்காணிக்குமாறு உள்ளூர் அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொண்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச அமைச்சர் நாரா லோகேஷ் வெளியிட்டுள்ள பதிவில், "காசிபுக்கா வெங்கடேஸ்வரர் கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பல பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். இது எங்களை ஆழ்ந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த ஏகாதசி நாளில் எங்களுக்கு ஆழ்ந்த வருத்தம் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்களுக்கு அரசு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறது. தகவல் கிடைத்தவுடன், அதிகாரிகள், மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அச்சன்நாயுடு மற்றும் உள்ளூர் எம்எல்ஏ கவுது ஷிரிஷ் ஆகியோரிடம் பேசினேன். பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடி உதவி வழங்குமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன்." எனத் தெரிவித்துள்ளார்.

விபத்து குறித்து பிரதமர் மோடி ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளத்தில் உள்ள வெங்கடேஸ்வர சுவாமி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் குறித்து அறிந்து நான் மிகவும் வேதனையடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் எனது எண்ணங்கள் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். உயிரிழந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா ரூ. 2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ. 50,000 வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், கர்நாடக முதல்வர் சித்தராமையா உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.




# வேலூர் மாவட்டத்தில் நவம்பர் 1 உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம்: மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

வேலூர், நவ.02-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா,, வளத்தூர் ஊராட்சியில், நவம்பர் 1 உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு, நடைப்பெற்ற சிறப்பு கிராம சபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமுலு விஜயன், குடியாத்தம் ஒன்றிய குழு தலைவர் சத்யானந்தம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஆனந்தி முருகானந்தம், ஒன்றிய குழு உறுப்பினர் பிரியா சக்திவேல், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால், வட்டாட்சியர் பழனி, வட்டார வளர்ச்சி அலுவலர் ஹேமலதா, ஊராட்சி மன்றத் தலைவர் சே.நிர்மலா சேட்டு, ஊராட்சி மன்ற செயலாளர் ஆர்.ரேவதி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: உன்னிகிருஷ்ணனுக்கு நீதிமன்ற காவல்

திருவனந்தபுரம், நவ.02-

சபரிமலை ஐயப்பன் கோயிலில் உள்ள துவாரபாலகர் சிலையின் தங்க கவசங்களில் இருந்து சுமார் நான்கரை கிலோ தங்கம் திருடுபோன வழக்கில் பெங்களூருவை சேர்ந்த தொழிலதிபர் உன்னிகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். பிறகு இரண்டாவது குற்றவாளியாக தேவஸ்தான முன்னாள் நிர்வாக அதிகாரி முராரி பாபு கைதானார்.

இருவரையும் இந்த வார தொடக்கத்தில் சிஐடி போலீஸார் ஒன்றாக விசாரித்தனர். பிறகு ஆதாரங்களை திரட்டுவதற்காக சபரிமலைக்கு அழைத்துச் சென்றனர். கர்நாடக மாநிலம் பெல்லாரியில் இருந்து மீட்கப்பட்ட தங்கத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இந்நிலையில் இருவரின் போலீஸ் காவல் முடிவுக்கு வந்ததால் இருவரையும் போலீஸார் நேற்று ரான்னி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பின்னர், உன்னிகிருஷ்ணனை திருவனந்தபுரம் சிறப்பு துணை சிறைக்கு மாற்ற நீதிபதி உத்தரவிட்டார். இதுபோல் முராரி பாபுவை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில் கோயில் கதவின் சட்டங்களில் இருந்து தங்கம் மாயமானது தொடர்பான மற்றொரு வழக்கில் உன்னி கிருஷ்ணனை சிஐடி போலீஸார் நேற்று கைது செய்தனர். இந்த வழக்கில் அவரை வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர்.

# 'மக்கள் விரோத திமுகவிடமிருந்து தமிழகத்தை மீட்போம்' விஜய்



சென்னை, நவ.02-

மக்கள் விரோத திமுகவிடமிருந்து மக்கள் சக்தியின் துணையோடு தமிழகத்தை மீட்போம். 2026ல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம். என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தினத்தையொட்டி விஜய் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாடு உருவாகக் காரணமான எல்லைப் போராட்டத் தியாகிகளையும் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டக் காரணமானவர்களின் தியாகங்களையும் நினைவுகூர்வோம். அவர்களை எந்நாளும் போற்றுவோம்.


மக்கள் விரோத திமுகவிடமிருந்து மக்கள் சக்தியின் துணையோடு தமிழ்நாட்டை மீட்போம். 2026ல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம். தமிழின் பெருமையும் தமிழ்நாட்டின் புகழும் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும். இனிய தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# செங்கல்பட்டு மாவட்டம், பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

பொன்மார், நவ.02-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (நவம்பர் : 01) ஊராட்சி மன்ற தலைவர்., எஸ். நாராயணன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., டி. காளீஸ்வரி அனைவரின் முன்பு நிறைவேற்றப்பட்ட பட்டியலில் விபரங்களை படித்துக் காட்டினார். தொடர்ந்து பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மழைக்காலங்களில் டெங்கு விழிப்புணர்வு பற்றி பொதுமக்களுக்கு பொன்மார் அரசு மருத்துவர்., ரீனா அறிவுரை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை கூட்டத்தில் எடுத்துரைத்தார் . தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர்., நாராயணன் ஆங்காங்கே காணப்படும் குப்பைகளை அகற்றி சுத்தமான ஊராட்சியாக வைத்துக் கொள்ள அனைவரும் உறுதுணையாக இருந்து ஒற்றுமையாக செயல்படுவோம் என்று கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




# செங்கல்பட்டு மாவட்டம், மதுரபாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

மதுரபாக்கம், நவ.02-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மதுரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (நவம்பர் : 01) ஊராட்சி மன்ற தலைவர்., மு. வேல்முருகன் மற்றும் மதுரபாக்கம், அகரம்தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சிகளின் ஒன்றிய கவுன்சிலர்மான : அமுதா முருகன் தலைமையில் மதுரபாக்கம் ஊராட்சி மன்ற அலுவலக வாளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர்., வேல்முருகன் பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்து கிராம சபை கூட்டத்திலேயே ஊராட்சி பணியாளர்களுக்கு உடனடியாக பணிகளை முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார் . மேலும் பொதுமக்களின் கோரிக்கையான காவல் துறை இரவில் ரோந்து பணியில் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கையை நிறைவேற்றி கிராம சபை சிறப்பாக நடைபெற்றது.




# புனித தோமையார் மலை ஒன்றியம் அகரம் தென் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

அகரம்தென், நவ.02-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் தாம்பரம் அடுத்த அகரம் தென் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (நவம்பர் : 01) ஊராட்சி மன்ற தலைவர்., ஜெகதீஸ்வரன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வாளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., ஏ. பிரபாகரன் நிறைவேற்றப்பட்ட பணிகளின் பட்டியலின் விபரங்களை அனைவரின் முன்பு படித்துக் காட்டினார். தொடர்ந்து பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து அகரம் தென் ஊராட்சி மேலும் மேலும் வளர்ச்சி அடைய பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு ஊராட்சி மன்ற தலைவர் கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.






■ சிவகங்கை மாவட்டம் இழுப்பக்குடியில் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளை முன்னிட்டு, சிவகங்கையில் உள்ள இந்தோதிபெத் எல்லை காவல் படையில் பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து அதிகாரிகளும், பயிற்சி மையத்தின் காவல் துணைத் தலைவர் டி. ஜஸ்டின் ராபர்ட், பிற அதிகாரிகள் மற்றும் பயிற்சியில் உள்ள 1500 பேர் உட்பட "ஒற்றுமைக்காக ஓடுங்கள்" பந்தயத்தில் பங்கேற்றனர். இந்த பந்தயம் பயிற்சி மைய வளாகத்திலிருந்து தொடங்கி இலுப்பைக்குடி மற்றும் பிற கிராமங்களுக்குச் சென்று ஒற்றுமையின் செய்தியை வழங்கி, பயிற்சி மைய வளாகத்தில் மீண்டும் நிறைவடைந்தது. நிகழ்ச்சியின் முடிவில், இந்த நிகழ்வில் நாட்டில் ஒற்றுமையையும் அமைதியையும் பேணுவதற்கு பயிற்சி மைய தலைவர் திரு. டி. ஜஸ்டின் ராபர்ட், காவல் துணைத் தலைவர் மற்றும் பிற அதிகாரிகள் மற்றும் பயிற்சியில் உள்ள 1500 பேர் உட்பட அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார். இதனுடன், வளாகத்தில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக ஒரு பந்தயமும் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் அனைத்து பெண்களும் குழந்தைகளும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்..




# அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேசிய ஒற்றுமை தின நிகழ்வு அனுசரிப்பு

காரைக்குடி, நவ.02-

சிவகங்கை மாவட்டம் இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேல்ன் 150 ஆவது பிறந்தநாளான அக்டோபர் 31, 2025 அன்று தேசிய ஒற்றுமை தினம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்டம் அலகு எண்89 சார்பாக அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நாட்டு நலப்பணித் திட்ட அலகு எண்89ன் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.நீ.ஜான்சன் வரவேற்புரை வழங்கினார். பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் நடராஜன் சிறப்புரை வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி சர்தார் வல்லபாய் படேல் பற்றிய தகவல்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். தேசிய ஒற்றுமை தினம் குறித்து நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விவாதப் போட்டி, புகைப்படப் போட்டி மற்றும் போஸ்டர் தயாரிப்பு போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்வின் நோக்கமான தேசிய ஒற்றுமை தின உறுதிமொழியினை மாணவர்களும், பேராசிரியர்களும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் இறுதியாக இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை உதவிப் பயிற்றுநர் திரு.ஹரிபாஸ்கர் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் ஏராளமான மாணவர்களும், பேராசிரியர்களும் மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கப்பலூர் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தணிக்கை வாசுகி ஊராட்சி செயலாளர் அழகர்சாமி மற்றும் கிராம பொதுமக்கள் பங்கேற்றனர்.



■ சென்னை கோட்டூர்புரம் அருகில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அகில இந்திய பெண்கள் மற்றும் சமூக நல அமைப்பின் சார்பில் நலத்திட்ட உதவிகள் நடைபெற்றது. இது நல்ல திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு மாநில தலைவர் A. M. விக்கிரமராஜா POPULAR STAR ICONIC AWARD 2025 சார்பில் பாரத் சேவா சேவை ரத்னா விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. இதன் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் சித்ரா குமரேசன் அரசினர் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு மற்றும் ஆதரவற்ற பெண்கள் குழந்தைகள் மற்றும் பார்வையற்றவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் செய்தார்.





■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், ஆலாத்தூர் ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., உடன் உள்ளார்.



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் வடபழஞ்சி ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலாளர் ரமேஷ் முன்னிலையில் கிராம பொதுமக்கள் அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

# மும்பை சென்றடைந்த அமைச்சர் பெருமக்களுக்கு மும்பை திமுக வினர் உற்சாக வரவேற்பு

சென்னை நவ02-

மும்பையில் நடைபெறும் கடல் சார் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்னையிலிருந்து மும்பை விமான நிலையம் சென்றடைந்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் தண்டாரம்பட்டு எ. வ. வேலு மற்றும் தமிழ்நாடு தொழில்கள் துறை முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி. ஆர். பி. ராஜா ஆகியோரை மும்பை திமுக பொறுப்புக் குழுத் தலைவர் ம. சேசுராசு தலைமையில் பொறுப்புக் குழு உறுப்பினர்களான அன்பழகன் , பொற்கோ , மாறன் ஆரியசங்காரன் , நீதித்துரை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகி சாலமோன்ராஜா, வக்கோலம் பகுதி திமுக செயலாளர் சேலம் மா. சீனிவாசன், தாராவி பகுதி தாராவி ஸ்டீஃபன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் வரவேற்பளித்தனர்...




# செங்கோட்டையனை நீக்கியதால் தென் தமிழகத்தில் பழனிசாமி படுதோல்வியை சந்திப்பார்: டிடிவி தினகரன்

மதுரை, நவ.02-

"முத்துராமலிங்கத் தேவருக்கு மரியாதை செலுத்த பசும்பொன் வந்து சென்ற செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கியது, தென் தமிழ்நாட்டு மக்களுக்கு நேர்ந்த அவமானம். பசும்பொன்னுக்கு விருந்தாளியாக வந்த செங்கோட்டையனை கட்சியிலிருந்து நீக்கிய பழனிசாமி தென் தமிழ்நாட்டில் படுதோல்வியை சந்திப்பார்." என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த டிடிவி. தினகரன், "ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று செங்கோட்டையன் 2 மாதங்களுக்கு முன்பே அழைப்பு விடுத்திருந்தார். 1972 எம்ஜிஆர் கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து செங்கோட்டையன் அதிமுகவில் பயணிக்கிறார், அவர் 1977 முதல் அதிமுகவில் தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து வருகிறார். எம்ஜிஆர் காலம் முதல் இப்போதுவரை சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கிற மூத்த நிர்வாகி செங்கோட்டையன் மட்டும்தான்.

நேற்று முன் தினம் செங்கோட்டையன் பசும்பொன்னுக்கு வந்தது அரசியல் நிகழ்ச்சி கிடையாது. அவர் 10 நாட்களுக்கு முன்பு பசும்பொன்னுக்கு வருவதாக என்னிடம் சொல்லியிருந்தார், நானும் வாருங்கள் என சொல்லியிருந்தேன். ஜெயலலிதா பசும்பொன் வரும்போதெல்லாம் செங்கோட்டையன் தான் ஏற்பாடுகளை செய்வார். அதேபோல ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணத்தின் நிகழ்ச்சிகளை பார்வையிட்டு பம்பரம் போல செயல்படுவார் செங்கோட்டையன். பிரச்சாரத்துக்கு வரும்போது செங்கோட்டையன் வந்து பார்வையிட்டு ஒப்புதல் தந்தால்தான் ஜெயலலிதா நிகழ்ச்சி நடக்கும் இடத்துக்கே வருவார்.

அந்த அளவுக்கு ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்ற நபரை கட்சியை விட்டு நீக்கும் தகுதி எடப்பாடி பழனிசாமிக்கு இல்லை. செங்கோட்டையன் அனைவரையும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றுதான் அழைப்பு விடுத்துள்ளார். பசும்பொன் வந்தபோது செங்கோட்டையன் எதுவும் அரசியல் பேசவில்லை. நான் தான் செய்தியாளர்களிடம் பேசினேன்.

குரங்கு கையில் சிக்கிய பூமாலை போல அதிமுகவை கையில் வைத்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. என்னையும், சசிகலாவையும், ஓபிஎஸ்சையும், செங்கோட்டையனையும் துரோகி என இபிஎஸ் சொல்கிறார். ஆனால் அவர்தான் துரோகி. 2021 தேர்தலில் அமித்ஷா அனைவரும் ஒன்றிணைந்து திமுகவை வீழ்த்த வேண்டும் என முயற்சி செய்தார், நானும் அதற்கு ஒப்புக்கொண்டேன். ஆனால், இபிஎஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அவர்தான் துரோகி.

இபிஎஸ்ஸை முதல்வராக்கிய 18 எம்எல்ஏக்களை நீக்கிய இபிஎஸ் துரோகியா?. இபிஎஸ்ஸை முதல்வராக்கிய சசிகலா துரோகியா?. இபிஎஸ்ஸை முதல்வராக்க பணியாற்றிய நான் துரோகியா?. துரோகத்துக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால், அது பழனிசாமிக்குத்தான் கொடுக்க வேண்டும்.

முத்துராமலிங்கத் தேவருக்கு மரியாதை செலுத்த பசும்பொன் வந்துசென்ற செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கியது, தென் தமிழ்நாட்டு மக்களுக்கு நேர்ந்த அவமானம். பசும்பொன்னுக்கு விருந்தாளியாக வந்த செங்கோட்டையனை கட்சியிலிருந்து நீக்கிய பழனிசாமி தென் தமிழ்நாட்டில் பெரும் தோல்வியை சந்திப்பார்.

திமுகவின் 'பி' டீம் என எங்களை சொல்கிறார் பழனிசாமி. ஆனால், 2021ல் திமுக ஆட்சிக்கு வந்ததற்கு காரணமே பழனிசாமிதான். ஆட்சியை காப்பாற்றிய பாஜகவுக்கு நன்றியோடு இருப்பதாக சொல்லும் பழனிசாமி, 2024 மக்களவைத் தேர்தலில் பாஜக கூட்டணியிலிருந்து வெளியேறி மோடிக்கே துரோகம் செய்தார். அவர் 2024 தேர்தலில் திமுகவுக்காக டம்மி வேட்பாளர்களை போட்டு 3வது, 4வது இடத்துக்கு அதிமுகவை கொண்டு சென்றார்.

ஜெயலலிதா என்னை கட்சியிலிருந்து நீக்கியது அனைவருக்கும் தெரிந்ததுதான். அதன்பின்னர்தான் பழனிசாமி என்னை துணைப் பொதுச் செயலாளராக ஏற்றுக்கொண்டு ஆர்கே நகரில் தொப்பி சின்னத்தில் எனக்கு வாக்கு கேட்டார். எடப்பாடி பழனிசாமியை நாங்கள் வீழ்த்தத் தேவையில்லை, அவர் செய்த துரோகமே அவரை வீழ்த்தும்.

2026 தேர்தலில் பழனிசாமியின் துரோகம் வீழ்த்த ப்படும், அமமுகதான் அதற்கான ஆயுதம். கொடநாடு கொலை வழக்கு பற்றி பேசினாமே பழனிசாமி பதறுவது ஏன்?. அரக்கர்கள் கொஞ்சம் கொஞ்சமாகவே அழிவை சந்திப்பார்கள், 2026ல் சூரசம்ஹாரம் நடக்கும், பழனிசாமி வீழ்த்தப்படுவார். செங்கோட்டையனை கட்சியிலிருந்து நீக்கியதற்கு பழனிசாமியின் சுயநலமும், பதவி வெறியும்தான் காரணம்." என்றார்.

# ட்ரோன் மூலம் பூச்சி மருந்து தெளிக்க பழநி விவசாயிகள் ஆர்வம்

பழநி, நவ.02-

பழநி பகுதியில் ஆளில்லா விமானம் எனப்படும் 'ட்ரோன்'களை பயன்படுத்தி வயல்களில் பூச்சி மருந்து தெளிக்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அதனால் ட்ரோன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கி உள்ளதால், பழநியில் மழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகள் தற்போது ஆர்வத்துடன் விவசாய பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது நெல், மக்காச்சோளம் உள்ளிட்ட விதைப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. வெளிநாடுகளில் ஆளில்லா விமானம் எனப்படும் 'ட்ரோன்' மூலம் உரம் மற்றும் பூச்சி மருந்துகளை வயல் வெளியில் தெளிக்கின்றனர்.

இதேபோல், தற்போது பழநி விவ சாயிகளும் ட்ரோன் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்க ஆர்வம் காட்டுகின்றனர். இவர்களுக்காக, பழநியைச் சுற்றியுள்ள கிராமங்களில்



ட்ரோன்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இரண்டு, மூன்று ஆட்கள் சேர்ந்து பல மணி நேரம் செய்யக்கூடிய வேலையை 15 நிமிடங்களில் செய்து முடிப்பதால் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அதனால், தற்போது ட்ரோன்களுக்கு கடும் கிராக்கி எற்பட்டுள்ளது.

இதுகுறித்து 'ட்ரோன்' ஆபரேட்டர் அருண் கூறியதாவது: ட்ரோனை பயன்படுத்தி தினமும் 4 முதல் 5 விவசாயிகளின் தோட்டங்களில் மருந்து தெளித்து வருகிறேன். ஒரு கேன் (10 லிட்டர்) மருந்து தெளிக்க வாடகை ரூ.500 . ஒரு ஏக்கரில் 10 முதல் 15 நிமிடங்களில் ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கலாம். அதனால் ட்ரோன்களுக்கு மவுசு அதிகரித்துள்ளது, என்றார்.

இதுகுறித்து கணக்கன்பட்டி விவசாயி அப்பாசாமி துரை கூறியதாவது: விவசாய தொழிலாளர்கள் பற்றாக் குறையால் குறித்த நேரத்தில் உரம் மற்றும் மருந்து தெளிக்க முடியாத நிலை உள்ளது. அதனை, ட்ரோன் மூலம் பூர்த்தி செய்ய முடிகிறது. ட்ரோன் மூலம் பயிர்களின் மேல் சரியான அளவு சீராக மருந்து தெளிக்கப்படுவதால் பயிர்களின் வளர்ச்சி நன்றாக இருக்கிறது.

ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பதால் நாள் முழுவதும் செய்ய வேண்டிய வேலை, ஒரு மணி நேரத்துக்குள் முடிந்து விடுகிறது. ட்ரோன் தொழில்நுட்பத்தால் நேரமும், பணமும் மிச்சமாகிறது. விவசாயிகள் பலரும் ட்ரோனை பயன்படுத்தி மருந்து தெளிக்க தொடங்கி உள்ளனர். அதனால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, முன்பதிவு செய்தால் மட்டுமே ட்ரோன் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது, என்றார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161